இறுதியாண்டுத் தேர்வு தமிழ் மொழி 2013

வகுப்பு 06

**பன்முகதேர்வு வினாக்கள் பகுதி 1 வருடம்: 06**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | பிழையற்ற தொடர்<br>1. சிங்கப்பிள்ளை 2. சிங்கக்குட்டி 3. சிங்கக்கன்று 4. சிங்கக்குஞ்சு | 1 | 2 | 3 | 4 |
| 2. | Judge என்பது<br>1. காவல்காரன் 2. கடைக்காரன். 3. நீதிபதி 4. வேலைக்காரன் | 1 | 2 | 3 | 4 |
| 3. | சிறுகக் --------- பெருக வாழ்க. (பழமொழி)<br>1. பெற்று 2. கட்டி 3. காட்டி. 4. கற்று | 1 | 2 | 3 | 4 |
| 4. | பாடகன் பாட்டுப் பாடினான். இதில் பயனிலை<br>1. பாட்டு 2. பாடகன் 3. ஒரு 4. பாடினான் | 1 | 2 | 3 | 4 |
| 5. | ஆயிரம் என்பது<br>1. ாரனெசநன 2. கைைவல 3. வநடெ 4. வாழரளயனெ | 1 | 2 | 3 | 4 |
| 6. | பாடுதல் என்பது<br>1. இடப்பெயர் 2. தொழிற்பெயர் 3. பொருட்பெயர் 4. காலப்பெயர் | 1 | 2 | 3 | 4 |
| 7. | செம்மை-தாமரை சேர்த்தெழுதுக.<br>1. செம்தாமரை 2. செம்டாமரை 3.செம்மைதாமரை 4. செந்தாமரை | 1 | 2 | 3 | 4 |
| 8. | நான் நன்றாகப் பாட்டுப்<br>1. பாடுகிறாய் 2. பாடுகிறோம். 3. பாடுவேன் 4. பாடுகிறான். | 1 | 2 | 3 | 4 |
| 9. | பொதுவாக வினைச்சொல் எத்தனை காலங்களைக் காட்டும்<br>1. 4 2. 2 3. 3 4. 1 | 1 | 2 | 3 | 4 |
| 10. | கெதியில் என்பது 1. விரைவில் 2. காதில் 3. போ 4. வருகிறேன் | 1 | 2 | 3 | 4 |
| 11. | பாட்டி நாம் படுக்க போகமுதல் ஒரு கதை<br>1. சொல்கிறார் 2. சொல்வார் 3. சொல் 4. சொன்னார் | 1 | 2 | 3 | 4 |
| 12. | ஊன்றுகோல் என்பது<br>1. chair 2. book 3. stick; 4. Walking stick | 1 | 2 | 3 | 4 |
| 13. | கூடி------------ கோடி நன்மை (பழமொழி)<br>1. போனால் 2. வாழ்ந்தால் 3. கழித்தால் 4. பேசினால் | 1 | 2 | 3 | 4 |
| 14. | சோம்பல் இதன் எதிர்ச்சொல்<br>1. மறைவு 2. உதிப்பு 3. இறப்பு 4. சுறுசுறுப்பு | 1 | 2 | 3 | 4 |
| 15. | பழங்களை சீப்பு சீப்பாகத் தரும் மரம்<br>1. பலாமரம் 2. வாழைமரம் 3. பூமரம் 4. மாமரம் | 1 | 2 | 3 | 4 |
| 16. | ‘இலை’ ஒரு .<br>1. வினைச்சொல் 2. காலப்பெயர் 3. சினைப்பெயர் 4. இடப்பெயர் | 1 | 2 | 3 | 4 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| 17. | அந்தப் பெரிய நாய் என்னை பார்த்து -<br>1. குரைத்து 2. குரைத்தது 3. குரைத்தன. 4. குறைத்தது. | 1 | 2 | 3 | 4 |
| 18. | கீரியும் பாம்பும் போல என்றால்<br>1. பிரிவு 2. வரவு 3. கோபம் 4. பகை | 1 | 2 | 3 | 4 |
| 19. | நகமும் சதையும் போல இருந்தார்கள் என்பது.<br>1. ஒற்றுமை 2. பிரிவு 3. கோபம் 4. வெறுப்பு | 1 | 2 | 3 | 4 |
| 20. | தெய்வத்தின் மறுபெயர்<br>1. கடவுள் 2. சிலை 3. ராமன் 4. காற்று | 1 | 2 | 3 | 4 |
| 21. | விளக்கின் ------------- பிரகாசமாக இருந்தது.<br>1. ஒலி 2. ஒளி 3. ஒழி 4. ஓலி | 1 | 2 | 3 | 4 |
| 22. | புகை மண்டலம் கண்ணை.<br>1.மரைத்தது 2.மறைத்தது 3.மறுத்தது 4. முரைத்தது | 1 | 2 | 3 | 4 |
| 23. | அவள் தன் வேலைகளைச்<br>1. வந்தன. 2. செய்தோம். 3. செய்தன 4. செய்தாள். | 1 | 2 | 3 | 4 |
| 24. | எடைடயபந் என்பது<br>1. கிராமம் 2. நாடு 3. பட்டணம் 4. வீடு | 1 | 2 | 3 | 4 |
| 25. | ஆயிரத்தி ஒன்று<br>1.101 2. 11 3. 10001 4. 1001 | 1 | 2 | 3 | 4 |
| 26. | பட்டாடை பிரித்தெழுதுக<br>1. பட-ஆடை 2. பட்டு-ஆடை 3. பட்-ஆடை 4. பட்-டாடை | 1 | 2 | 3 | 4 |
| 27. | பிழையற்ற தொடர் எது?<br>1 .நீயும் நானும் வந்தேன் 2. நீயும் நானும் வந்தோம்<br>3. நீயும் நானும் வந்தீர் 4. நீயும் நானும் வந்தான் | 1 | 2 | 3 | 4 |
| 28. | நங்கள் நாளை உங்கள் வீட்டுக்கு<br>1. வந்தோம் 2. வருகிறோம் 3. வருவோம் 4. வருவேன் | 1 | 2 | 3 | 4 |
| 29. | ------------------ நேற்று சினிமா பார்க்கச் சென்றார்கள்.<br>1. அது 2. அவை 3. அவர்கள் 4. அவன் | 1 | 2 | 3 | 4 |
| 30. | கடலில் ------- அதிகமாக உள்ளது.<br>1. அழை 2. அலை 3. தீவு 4.அளை | 1 | 2 | 3 | 4 |

**(30 புள்ளிகள்)**

இறுதியாண்டுத் தேர்வு தமிழ் மொழி 2013
வகுப்பு 06

**வினாக்கள்** **வருடம்: 06**

**1.பின்வரும் பந்தியை வாசித்துஇ கீழ்வரும் கேள்விகளுக்குப் பதில் எழுதுக.**

**விபுலானந்த அடிகள்**

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த ஈழம் தந்த அரும்பெரும் அறிஞர் விபுலானந்த அடிகள் ஆவார். அவர் தமிழுலகம் கண்ட பேரறிஞர் என்ற பெருமையோடு உலகம் போற்றும் முத்தமிழ் வித்தகராவும் விளங்கியவர். தாய்மொழிக்கு அளப்பரிய பணிகள் புரிந்தவர். ஆசிரியர் கல்லூரி முதல்வர், பேராசிரியர், நாளிதழாசிரியர் நூலாசிரியர் என பல பொறுப்புக்களையும் வகித்தவர். 1892ம்ஆண்டு பங்குனித்திங்கள் 29ம் நாள் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பில் காரை தீவில் பிறந்தார். இளமைக்கால பெயர் மயில் வாகனன். இளமையிலேயே தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்றார். உயர்கல்வி கற்ற புனித மைக்கேல் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்து பின்னர் லண்டன் பல்கலைக்கழக அறிவியல் பட்டதாரியானார். மானிப்பாய் இந்துக் கல்லூரியில் முதல்வராகப் பணி புரிந்து 1924ல் துறவியானர். அன்று முதல் விபுலானந்தர் என பெயர் பெற்றார். இறைநெறித் தத்துவங்களைக் கற்றார். தமிழ் மொழியையும் இறை நெறியையும் வளர்க்கப் பள்ளிகள் அமைத்தார்.

எந்த நூற்றாண்டில் வாழ்ந்தார் விபுலானந்த அடிகள்?

____________________________________________________________

விபுலானந்த அடிகள் வகித்த மூன்று பொறுப்புகளை எழுதவும்?

____________________________________________________________

அவரை ஏன் தமிழுலகம் போற்றுகின்றது?

____________________________________________________________

எத்தனை மொழிகளை அவர் கற்றார்?

____________________________________________________________

அவர் ஏன் தன் பெயரை மாற்றிக்கொண்டார்?

____________________________________________________________

**(10 புள்ளிகள்)**

**2. பிரித்து எழுதுக** **சேர்த்து எழுதுக**

| | | | |
|---|---|---|---|
| நூற்றாண்டு | _________ | இரண்டு + பத்து + ஐந்து | _________ |
| தமிழோசை | _________ | எட்டு + நூறு | _________ |
| பழம்பெருமை | ________ | கருமை + இருள் | _________ |
| பொருளுதவி | ________ | சிறிய + ஆறு | _________ |
| செந்தமிழ் | ________ | உலகு + அறிய | ________ |

**(10 புள்ளிகள்)**

**2.** அண்மையில் நிகழ்ந்த **காட்டுத்தீ Bushfire in NSW** பற்றி **எழுதுக.** (50 சொற்கள் குறையாமல)

______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
____________________________________________________________

**(10 புள்ளிகள்)**

**4. மாறிக்கிடக்கும் சொற்களைக் கருத்தமைய மாற்றி சரியான வசனத்தில் அமைக்க.**

மந்திரி - பிரதம – தந்தார் - கூட்டத்துக்கு - வருகை

_______________________________________________

நடனம் - ஆடினாள் - அழகான – மேடையில் - மதி

_______________________________________________

மாதங்களில் - மூன்று – அந்த – கட்டி – முடித்தனர் - வீட்டைக்

_______________________________________________

போட்டியில் - ஓட்டப் - அவர்கள் - பற்றினார்கள் - பங்கு

_______________________________________________

வேண்டாம் - இருக்க – ஓதாமல் - ஒரு - நாளும்

_______________________________________________

**(10 புள்ளிகள்)**

**5. கீறிட்ட இடத்தில் பொருத்தமான சொல்லை வைத்து எழுதுக.**

(தெய்வம், , பச்சை, உறுதி, உலகளவு, முயற்சி)

ஆலும் வேலும் பல்லுக்கு _______________

துரத்துப் ____________________ கண்ணுக்கு குளிர்ச்சி.

கற்றது கையளவு கல்லாதது _______________

_________________ திருவினையாக்கும்.

அன்னையும் பிதாவும் முன்னறி _________________.

**(5 புள்ளிகள்)**

## 6. சரியான சொல்லின் கீழ் கீறிடுக.

அந்த வாகனம் ______________ (விரைவாக, விறைவாகச்) சென்றது.

சிறு _____________ (குளந்தை, குழந்தை) நீண்ட நேரம் தூங்கி எழுந்தது.

காட்டில் _____________ (புளி,புலி) உணவு தேடித் திரிந்தது.

எஜமானனைக் கண்ட நாய் ______________ (வாளை, வாலை) ஆட்டியது.

அவன் தன் நண்பனை_______________ (வழி, வளி) அனுப்பி வைத்தான்.

**(5 புள்ளிகள்)**

**7. பின்வரும் வசனங்களை ஒரு வசனமாக்கி எழுதுக.**

எலி ஓடியது. பூனை துரத்தியது.

____________________________________________________________

லதா நடனம் ஆடினாள். மீனா பாட்டு பாடினாள்.

____________________________________________________________

அவன் வண்டி ஓட்டினான். நண்பன் அருகில் அமர்ந்தான்.

____________________________________________________________

ராமன் பந்து எறிந்தான். ரவி பந்தைப் பிடித்தான்.

____________________________________________________________

மாணவன் பாடத்தை எழுதினான். ஆசிரியர் அதைக் எடுத்துப் பார்த்தார்.

____________________________________________________________

**(10 புள்ளிகள்)**

**8.** அன்மையில் நடந்த உமது பாடசாலையின் கலைவிழாவை பற்றி சிட்னியில் இருக்கும் உன் மாமாவிற்கு ஒரு கடிதம் எழுதவும். ( நேரம் - நிகழ்ச்சிகள் - உன் பங்கு – சிறந்த நிகழ்ச்சி ஆகிவற்றை இக்கடிதத்தில் எழுதவும்) **(80 செற்கள் குறையாமல்)**

**(10 புள்ளிகள்)**